**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 70/2020 |
| Name | : Prabhakaran |
| P.W. | : 4 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.07.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் வேடபட்டி புதுக் காலனியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். சம்பவ சமயத்தில் வி.கே.எம் செங்கல் சூளையில் வேலை செய்து வந்தேன். 24.01.2019 ம் தேதி காலை 09.00 மணிக்கு நான் எனது வீட்டில் இருந்து வேலைக்கு வந்து வேலை செய்து கொண்டிருந்த போது சத்தம் கேட்டது சென்று பார்த்த போது கணியூர் – மடத்துக்குளம் ரோட்டில் மேற்கு புறம் TATA ACE வாகனம் பள்ளத்தில் இறங்கி நின்று இருந்தது மற்றொரு TATA ACE வாகனம் மடத்துக்குளம் நோக்கி தெற்கே சென்றுவிட்டது. நான் சென்று பார்த்த போது பெரிய இரண்டு சக்கர வாகனம் கீழே விழுந்து கிடந்தது பக்கத்தில் கணியூரைச் சேர்ந்த மதியழகன் மற்றும் ஒரு பெண் கீழே விழுந்து கிடந்தார்கள். அந்த பெண்ணுக்கு தலையின் பின் பக்கத்தில் காயம் ஏற்பட்டிருந்தது. காதில் ரத்தம் வந்தது. ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனை சென்றார்கள். பள்ளத்தில் இறங்கி நின்ற TATA ACE வாகனத்தின் எண் தெரியாது ஸ்ரீராம ஜெயம் என்று முன்னால் எழுதி இருந்தது. மற்றொரு TATA ACE வாகனத்தின் எண்

தெரியாது. இது சம்மந்தமாக போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) சம்பவம் சோழமாதேவி மேட்டில் நடந்ததா என்றால் ஆமாம். அதற்கு அரை கி.மீ தெற்கே தள்ளி வி.கே.எம் செங்கல் சூளை உள்ளது என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் அங்கு தான் வேலை பார்த்தேன். அடிப்பட்டதை வேறு ஆள் சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல நான் பார்த்தேன். சத்தம் கேட்டு தான் நான் அங்கு சென்றதாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பள்ளத்தில் இறங்கியிருந்த ராம ஜெயம் என்று எழுதியிருந்த வாகனத்தின் ஓட்டுநர் தான் எனக்கு விவரம் சொன்னார் என்றால் சரிதான். அந்த ஓட்டுநரின் பெயர் தெரியாது.

(2) மதியழகன் மற்றும் அவரது அம்மாவிற்கு அடிபட்ட விவரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் வழக்குச் சம்பவத்தை பார்க்கவில்லை மதியழகன் இரண்டு சக்கர வாகனத்தை ஓட்டவில்லை நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(3) போலீசார் எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் 25.01.2019 ம் தேதி காலை 10.15 மணிக்கு வி.கே.எம் செங்கல் சூளையில் வைத்து விசாரித்தார்கள். காயம்பட்ட பெண்மணி எனக்கு வேண்டியவர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னபடி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 70/2020 |
| Name | : Nizamudeen |
| P.W. | : 5 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.07.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் சோழமாதேவியில் வசித்து சோழமாதேவி மேட்டில் பானிபூரி கடை வைத்துள்ளேன். 25.01.2019 ம் தேதி காலை 10.15 மணிக்கு விபத்து சம்மந்தமாக வி.கே.ஹாலோ பிளாக் அருகில் வைத்து விசாரித்து போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னுடன் செந்தில் குமார் என்பர் கையொப்பம் செய்தார் அவர் தற்போது இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) விபத்து சம்மந்தமாக விசாரித்ததற்காக கையொப்பம் போட்டுக் கொடுத்தேன் என்றால் சரிதான். சோழமாதேவி மேட்டில் வைத்து விசாரித்தார்கள். சோழமாதேவி மேட்டிற்கும் வி.கே.மில்லிற்கும் ½ கி.மீ இருக்கும் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து

எத்தனை தாளில் கையெழுத்து போட்டேன் என்றால் ஞாபகம் இல்லை காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன். இந்த விபத்தில் காயம்பட்ட நபர் எனக்கு வேண்டியர் என்பதால் நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் எந்த வரைபடமும் தயார் செய்யவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு நான் கையொப்பம் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் தெரியாது.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/−Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்